செ.வெ.எண்:32 நாள்:21.05.2019

**கரூர் மாவட்டம்**

**கரூர் மக்களவைத்தொகுதி பொது தேர்தல் மற்றும் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணும் மையத்தில் கடைபிடிக்கவேண்டிய விதிமுறைகள் குறித்து வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

அதன் விபரம் வருமாறு:

நடைபெற்று முடிந்துள்ள 23-கரூர் மக்களவைத்தொகுதி, 134-அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி தளவாப்பாளையம் எம்.குமாராசாமி பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணும் மையத்தில் 23.05.2019 அன்று நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கையின்போது வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் கடைபிடிக்கவேண்டிய விதிமுறைகள் தொடர்பாக இன்று(21.05.2019) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்ணாணிப்பாளர் திரு. வா.விக்ரம்,இ.கா.ப அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது:

23-கரூர் மக்களவைத்தொகுதி 134-அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணும் மையமான தளவாப்பாளையம் எம்.குமாராசாமி பொறியியல் கல்லூரியில் வருகிற 23.05.2019 அன்று வாக்கு எண்ணும் பணி நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்கள் வாக்கு எண்ணும் நாளன்று வாக்கு எண்ணும் மையத்திற்கு காலை 5.00 மணிக்கு முன்னதாகவே வந்துவிடுவார்கள். வாக்கு எண்ணுகை மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்கள் எந்தெந்த மேசையில் பணியாற்ற உள்ளார்கள் என்பது 23.05.2019 அன்று காலை 5.00 மணிக்கு கனிணி மூலம் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே அவர்களுக்கு தெரியவரும்.

23.05.2019 அன்று காலை 8.00 மணிக்கு தபால் வாக்குகள் எண்ணும் பணிகள் தொடங்கப்படும். சுமார் 8.30 மணியளவில் மின்னணு வாக்கு இயந்திரத்தில் பதிவாகியுள்ள வாக்குகள் எண்ணும் பணிகள் துவங்கும்.

மேலும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்களுக்கள் வாக்கு எண்ணும் மையத்திற்கு வரும்போது கைபேசி, லேப்டாப், ஐ-பேட் உட்பட எந்தவொரு மின்னணு சாதனத்தையும் எடுத்துவரக்கூடாது. சதாராண கால்குலேட்டர் மட்டும் தேவைப்பட்டால் எடுத்து வரலாம். மேலும், உங்களுக்கு வழங்கப்படும் புகைப்படத்துடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையினை அணிந்துவரவேண்டும்.

வாக்குகள் எண்ணும் பணிக்காக ஒவ்வொரு சட்டமன்றத்தொகுதிக்கும் 14 மேசைகள் போடப்பட்டிருக்கும். ஒவ்வொரு வாக்குகள் எண்ணும் மேசைக்கும் ஒரு மேற்பார்வையாளர், ஒரு உதவியாளர், ஒரு நுண்பார்வையாளர் என மூன்று நபர்கள் பணியில் இருப்பார்கள். வாக்கு எண்ணும் பணி மேற்பார்வையாளர் மற்றும் உதவியாளரால் மேற்கொள்ளப்படும்.

கரூர் மக்களவைத்தொகுதியில் உள்ள ஆறு சட்டமன்றத்தொகுதிகளில் 133-வேடச்சந்தூர் தொகுதிக்கு 22 சுற்றுகளும், 134-அரவக்குறிச்சி தொகுதிக்கு 18 சுற்றுகளும், 135-கரூர் தொகுதிக்கு 19 சுற்றுகளும், 136-கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு 19 சுற்றுகளும், 138-மணப்பாறை தொகுதிக்கு 24 சுற்றுகளும், 179-விராலிமலை தொகுதிக்கு

19 சுற்றுகளும் இருக்கும். அதே போல அரவக்குறிச்சி சட்டமன்றத்தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கையைப் பொறுத்தவரை 18 சுற்றுகள் இருக்கும்.

வாக்கு எண்ணிக்கையின் போது அனைத்து வாக்குகளும் குறிக்கப்பட்ட பின்னர் வாக்கு எண்ணுகை மேற்பார்வையாளரால் கையொப்பம் இடப்பட்டு, அப்போது இருக்கும் அனைத்து முகவர்களிடமும் கையொப்பம் பெறப்படும். 23-கரூர் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட ஆறு சட்டமன்றத் தொகுதிகக்கான வாக்காளர் வாக்குப்பதிவு தணிக்கை இயந்திரங்களில் (VVPAT) ஒவ்வொரு சட்டமன்றத்தொகுதிக்கும் 5 வாக்குச்சாவடிகள் வீதம் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும். அவ்வாறு தேர்வுசெய்யப்படும் வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட VVPAT இயந்திரங்களில் சேகரமாகியுள்ள காகித சீட்டுகள் வேட்பாளர்கள் வாரியாக எண்ணி அவற்றை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவாகியுள்ள வாக்குகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்படும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவாகியுள்ள வாக்குகளுக்கும், VVPAT இயந்திரங்களில் சேகரமாகியுள்ள காகித சீட்டுகளுக்கும் இடையில் வேறுபாடு இருப்பின் VVPAT இயந்திரத்தில் சேகரமாகியுள்ள காகித சீட்டுகளின் எண்ணிக்கையே இறுதியானதாக எடுத்துக்கொள்ளப்படும் என்று இந்தியத்தேர்தல் ஆணையம் வழிகாட்டி நெறிமுறைகளை வழங்கியுள்ளது. மேலும் வாக்கு எண்ணும் மையம் பாதுகாப்பு பணிக்காக எல்லை பாதுகாப்பு மற்றும் காவல்த்துறையை சேர்ந்த 1200 க்கும் மேற்பட்டவர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

வாக்கு எண்ணும் பணியை பார்வையிட தேர்தல் பார்வைாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் அரவக்குறிச்சி சட்டமன்றத்தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை மற்றும் மக்களவைத்தொகுதி தேர்தலில் அரவக்குறிச்சி தொகுதியில் பதிவான வாக்குகள் எண்ணும் பணியை கண்காணிக்க திரு.ஸ்ரீஹரி பிரதாப் சாஹி.இஆப. (SRIHARI PRATAP SHAHI.IAS.) அவர்களும், கிருஷ்ணராபுரம், கரூர், வேடச்சந்துார் ஆகிய சட்டமன்றத்தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் பணிகளை கண்காணிக்க திரு.பிரசாந்த் குமார்.இஆப., (PRASHANT KUMAR.IAS), அவர்களும், மணப்பாறை மற்றும் விராலிமலை தொகுதிகளுக்கான வாக்குகளை எண்ணும் பணிகளை கண்காணிக்க திரு.டி.கே.வினித். ( VINEETH.T.K) அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வாக்கு எண்ணும் பணிகள் அமைதியான முறையில் நடைபெற அனைவரும் தங்களால் ஆன முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்த்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திருமதி.செல்வசுரபி (பொது), திரு.ரவிச்சந்திரன் (தேர்தல்), உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் திரு.கு.சரவணமூர்த்தி (கரூர்), திருமதி.மீனாட்சி (அரவக்குறிச்சி), திருமதி.மல்லிகா(கிருஷ்ணராயபுரம்), திரு.காமராஜ் (மணப்பாறை), திரு.ராமு (வேடச்சந்துார்), திரு.கீதா (விராலிமலை), உதவி ஆட்சியர்கள் திரு,கணேஷ், திருமதி.லீலாவதி உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.